# வெளிநாடுகளில் வதியும் ஓய்வூதியர்களிற்கான உயிர்வாழ்ச் சான்றிதழைப் பெறல் -2018

வெளிநாடுகளில் வதியும் ஓய்வூதியர்களின் 2018 ஆம் ஆண்டிற்கான உயிர்வாழ்ச் சான்றிதழ் 2017.12.11 ஆம் திகதி தொடக்கம் 2018.03.31 ஆம் திகதி வரை பெற்றுக் கொள்ள திட்டமிடப்பட்டுள்ளது. வெளிநாட்டு ஓய்வூதியக் கிளையூடாகவோ அன்றி தாங்கள் வதியும் நாட்டின் தூதரகத்தின் ஊடாகவோ மாத்திரம் வெளிநாடுகளில் வதியும் ஓய்வூதியர்கள் தமக்கான உயிர்வாழ்ச் சான்றிதழைச் சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளல் வேண்டும்.

02. www.pensions.lk. எனும் இணையத்தள முகவரியில் "**உயிர்வாழ்ச் சான்றிதழ் 2018**" மாதிரிப் படிவத்தைப் பதிவிறக்கம் செய்து, பூரணப்படுத்திய அப்படிவத்தை வெளிநாட்டு ஓய்வூதியக் கிளையிலொ அன்றி தாங்கள் வதியும் நட்டின் தூதரகத்திலோ ஓய்வூதியர் தாம் நேரிடையாகச் சென்று சமர்ப்பிப்பதுடன் செல்லுபடியாகும் கடவுச் சீட்டை சமர்பிப்பதனூடாக தமது ஆள்அடையாளத்தை உறுதிப்படுத்துதல் வேண்டும்.

03. ஓய்வூதியப் பணிப்பாளர் நாயகம் / ஓய்வூதியப் பணிப்பாளர் / உதவிப் பணிப்பாளர் (ஓய்வூதியம்)/ வெளிநாட்டுத் தூதரகங்களில் உள்ள அதிகாரம் பெற்ற அலுவலர்/ பிரிவுத் தலைவர் (வெளிநாட்டு ஓய்வூதியக் கிளை) ஆகியோரில் எவரேனும் ஒருவரால் அத்தாட்ச்சிப் படுத்தப்பட்ட உயிர்வாழ்ச் சான்றிதழ் மாத்திரமே செல்லுபடியாகும் உயிர்வாழ்ச் சான்றிதழாக ஏற்றுக்கொள்ளப்படும்.

04. நோய்வாய்ப்பட்டு மாருத்துவ காரணங்களால் தூதரகத்திற்குச் செல்லமுடியாத நிலையில் உள்ள ஓய்வூதியர்கள் மாத்திரம் தமது உயிர்வாழ்ச் சான்றிதழைதமக்குசிகிச்சை வழங்கும் மருத்துவரால் அத்தாட்சிப்படுத்தி குறிப்பிட்ட தூதரகத்தில் சமர்ப்பிப்பதனூடாக ஓய்வூதியத் திணைக்களத்திற்கு அனுப்பிவைத்தல் வேண்டும்.

05. தூதரகங்களால் பெற்றுக் கொள்ளப்படும் உயிர் வாழ்ச் சான்றிதழ் உருவருடிப்பிரதி(scan) செய்யப்பட்டுவதுடன் ஓய்வூதியத் தரவுத்தளத் தொகுதிக்கு application.pensions.gov.lk/foreign எனும் பட்டியலைப் பயன்படுத்துவதனூடாக பதிவிடப்படல் வெண்டும். ஓய்வூதியத் திணைக்களத்தால் ஆய்வு செய்யப்பட்ட பின்னர் இச்சான்றிதழ் ஏற்றுக் கொள்ளல் / நிராகரித்தல் செய்யப்படவேண்டும்.

06. வெளிநாட்டு ஓய்வூதியர்களால் ஓய்வூதியத் திணைக்களத்தின் வெளிநாட்டு ஓய்வூதியக் கிளைக்குச் சமர்ப்பிக்கப்படும் உயிர் வாழ்ச் சான்றிதழ்கள் ஓய்வூதியப் பணிப்பாளர் நாயகத்தினால்/பணிப்பாளரால்(ஓய்வூதியம்) / உதவிப் பணிப்பாளரால்(ஓய்வூதியம்) அல்லது பிரிவுத் தலைவரால் (வெளிநாட்டு ஓய்வூதியம்) சான்றுறுதிப்படுத்தப்பட்ட பின்னர் தரவு தளத் தொகுதியில் நேரடியாகப் பதிவிடப்படும். உயிர் வாழ்ச் சான்றிதழ்கள் தரவுத் தளத் தொகுதியில் பதிவிடப்பட்டதும் ஓய்வூதியருக்கு அறிவித்தல் கிடைக்கப் பெறுவதுடன் 2018.04.01 தொடக்கம் 2018. 04.30 ஆம் திகதி வரையான காலப்பகுதிக்குள் பூரணமற்ற நிராகரிக்கப்பட்ட விண்ணப்பம் தொடர்பிலும் திணைக்களத் இணையத் தளத்தில் அறித்தல் வழங்கப்படும்.

07. மூன்று (3) வருடங்களிலும் குறைந்த காலப்பகுதியில் வெளிநாடுகளிற்குச் சென்றுள்ள பிரதேச செயலகங்களினூடாக ஓய்வூதியம் பெறும் ஓய்வூதியர்களது உயிர் வாழ்ச் சான்றிதழ்கள் உரிய பிரதேச செயலகங்களினூடாக சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

08. 2018.04.30 ஆம் திகதிக்கு முன்னதாக உயிர் வாழ்ச் சான்றிதழ்கள் சமர்ப்பிக்காத ஓய்வூதியர்களது ஓய்வூதியக் கொடுப்பனவுகளை 2018 வைகாசி மாதத்திலிருந்து தற்காலிகமாக நிறுத்திவைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டும். இருப்பினும் முழுமையான தகவலற்ற முற்றுப்பெறாது சமர்ப்பிக்கப்பட்ட உயிர் வாழ்ச் சான்றிதழ்களை ஓய்வூதியர்கள்மீண்டும் சமர்ப்பிக்கும் நோக்குடன் ஒரு நிவாரண காலமாக 2018.04.01 தொடக்கம் 2018.04.30 ஆம் திகதி வரையான காலப்பகுதிக்கு அனுமதி வழங்கப்பட்டும். மேற்குறிப்பிட்ட

காலப்பகுதியிலும் உயிர் வாழ்ச் சான்றிதழ்கள் சமர்ப்பிக்காத ஓய்வூதியர்களது ஓய்வூதியக் கொடுப்பனவுகளை 2018 வைகாசி மாதத்திலிருந்து தற்காலிகமாக நிறுத்திவைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டும். உயிர் வாழ்ச் சான்றிதழ்கள் சமர்ப்பிக்காது நிறுத்திவைக்கப்பட்ட ஓய்வூதியர்களது ஓய்வூதிய நிலுவைக் கொடுப்பனவுகள் தொடர்பில் பின்னர் அறிவித்தல் வழங்கப்படும்.

09. ஓய்வூதிய கொடுப்பனவு செயல்முறை ஓய்வூதியர்களின் அடையாளத்தை உறுதிப்படுத்துவதில் மட்டுமே தங்கியுள்ளமையால், 2018 ஆம் ஆண்டிற்கான உயிர்வாழ்ச் சான்றிதழ்கள் சமர்ப்பிக்கும் செயல்முறையை வெற்றிகரமானதாக்க உங்கள் ஒத்துழைப்பு மிகவும் பாராட்டுதற்குரியது.